# பின்னணித் தகவல்கள்

**அட்டர்னி ஜெனரல்**
**அமைச்சகம்**

உடனடி வெளியீட்டுக்காக
டிசம்பர் 5, 2006

**மனித உரிமைகள் சட்டத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியதன் வாயிலாக நீதியை அணுகும் வசதியை மேம்படுத்துகிற மெக்கின்டி அரசு**

பாகுபாடுகளை இன்னும் சிறப்பாகத் தடுக்கவும், புகார்களை மேலும் விரைவாக, திறனுடன் தீர்ப்பதற்கும் ஒன்டாரியோவின் மனித உரிமைகள் அமைப்பை நவீனப்படுத்தி வலுப்படுத்துகிறது மெக்கின்டி அரசு. மனித உரிமைகள் சட்டத் திருத்தச் சட்டம், 2006 (சட்ட வரைவு 107), ஒன்டாரியோவில் 44 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் அமைப்பில் பெருத்த மாற்றங்களைக் கொண்டு வரும். இது, ஒன்டாரியோவில் மனித உரிமைகளை முன்னெடுத்துச் செல்லுதல், முன்னேற்றுதல் மற்றும் நடைமுறைப்படுத்துவதை மேம்படுத்தும்.

1992 கார்னிஷ் அறிக்கை உள்பட பல்வேறு அறிக்கைகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தச் சீர்திருத்தங்கள், பொதுமக்களுக்கான சேவையை மேம்படுத்தும், மாகாணத்தில் மனித உரிமைகளை முன்னெடுத்துச் செல்லும்.

மனித உரிமைகள் சட்டத் திருத்தச் சட்டம் 2006 இன்கீழ், புகார்களுக்கான புதிய நடைமுறை செயல்படுத்தப்படும்; தனிநபர் கோரிக்கைகளை நேரடியாக ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயத்திடம் அளிக்க முடியும்.

உரிய காலத்திலும், தீர்ப்பாயத்தின் அதிகார எல்லைக்கு உட்பட்டதாகவும் உள்ள விண்ணப்பங்கள் அனைத்தும் அவற்றின் தகுதியின் அடிப்படையில், மேலும் விரைவாகவும், மேம்பட்ட பகிரங்கத்தன்மையுடனும் தீர்ப்பாயத்தால் விசாரிக்கப்படும். மற்றவரின் சார்பாக நிறுவனங்கள் விண்ணப்பம் செய்யும் அனுமதி இதன் மூலம் முதன்முதலாக வழங்கப்படுகிறது; புகார் பதிவு செய்வதற்கான காலவரை ஓராண்டாக நீட்டிக்கப்படுகிறது. தீர்ப்பாயத்தில் உள்ள நடுவர்கள், மனித உரிமைகள் விஷயத்தில் திறமை பெற்றவர்களாக இருப்பார்கள்; ஒளிவுமறைவற்ற, போட்டிச் செயல்முறையின் மூலம் நியமிக்கப்படுவார்கள்.

பொதுநலனை உத்தேசித்து, தான் சரி என்று நம்புகிற பட்சத்தில், எந்தவொரு பிரச்சினையையும் விசாரிக்கும் அதிகாரமும், தீர்ப்பாயத்தின் முன்உள்ள எந்தவொரு விண்ணப்பத்திலும் தலையிடும் அதிகாரமும் ஒன்டாரியோ மனித உரிமகள் ஆணையத்துக்கு இருக்கும். தீர்ப்பாயத்தின்முன் தானே விண்ணப்பங்களை முன்வைக்கவும் புதிய சட்டம் ஆணையத்துக்கு அனுமதி அளிக்கிறது.

ஆணையம் ஆண்டுக்கொரு முறை ஒன்டாரியோ மக்களுக்கு அறிக்கை அளிக்கும்; தான் தேவை என்று கருதுகிற பட்சத்தில் வேறெந்த அறிக்கை அளிக்கவும் ஆணையத்துக்கு அதிகாரம் இருக்கும். ஒன்டாரியோவின் பன்முகத்தன்மையை பிரதிபலிக்கும் வகையில், ஆணையர் மனித உரிமைகள் விஷயத்தில் வல்லமை பெற்றவராக இருப்பார் என்பது முதல்முறையாக சட்டமாகிறது.

இந்தச் சட்டம், தீர்ப்பாயத்தின் முன்உள்ள விண்ணப்பங்களின் அனைத்து அம்சங்களுடனும் தொடர்புடைய சட்ட மற்றும் இதர ஆதரவுச் சேவைகளை சிக்கனமாக திறனுடன் வழங்கும் மாகாணரீதியான அமைப்பை நிர்வகிப்பதற்காக பொதுநிதி கொண்டு இயங்குகிற, பொது மக்களுக்குப் பதிலளிக்கும் பொறுப்புடைய புதியதோர் சட்ட ஆதரவு மையத்தை நிறுவும். அதாவது, தொடக்கம் முதல் தீர்ப்பாயத்தின் ஆணை நிறைவேற்றப்படுவது வரை என கடைசி வரையிலும் விண்ணப்பதாரர்களுக்கு சேவையும் ஆதரவும் வழங்குவது என்று பொருளாகும்.

நீதித்துறை முன்முனைப்புகளுக்கான இதர வசதிகள்

மேம்பட்ட பகிரங்கத்தன்மை, ஒளிவுமறைவின்மை, பொறுப்புடைமை ஆகியவற்றை வழங்கி, ஒன்டாரியோ நீதித்துறை அமைப்பை நவீனப்படுத்தவும், நீதியை அணுகும் வசதியை மேம்படுத்தவும் இதர பல முன்முயற்சிகளை அரசு நிறைவேற்றியுள்ளது. இந்த முன்முயற்சிகளில் இவையும் அடங்கும்:

- சட்ட வரைவு 14, நீதி அணுகுவசதிச் சட்டத்தை நிறைவேற்றுதல்:
    - துணைநீதி அமைப்பை நெறிப்படுத்துவது
    - அமைதிக்கான நீதிச் சட்டத்தைத் திருத்துதல்
    - மாகாண குற்றங்கள் சட்டத்தைத் திருத்துதல்
    - ஒன்டாரியோவின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை பொருள்படுத்துவது மற்றும் பிரச்சாரப்படுத்துவதற்கான விதிகளை நவீனப்படுத்த, சட்டமியற்றுவதற்கான சட்டத்தை உருவாக்குதல்
    - வரம்புகளுக்கான சட்டத்தைத் திருத்துதல்
    - நீதிமன்றங்கள் சட்டத்தைத் திருத்துதல்
- வழக்குகள் விசாரணைக்கு வருவதற்கு ஆகும் காலத்தைக் குறைப்பதற்காக அமைதி நீதித்துறையில் 61 நீதிபதிகள், 45 நீதியரசர்கள் மற்றும் கூடுதல் நீதிமன்ற ஊழியர்களை நியமித்தல். துப்பாக்கிகள் மற்றும் குண்டர்கள் தடுப்புப் படைக்காக (Guns and Gangs Task Force) என 64 கிரவுன்களை (Crowns) அரசு குத்தகைக்கு அமர்த்தியுள்ளது. அதேபோல, ஒன்டாரியோ நீதிமன்றத்தில் குடும்ப மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு வழக்குகளை விசாரிக்கும் நீதிபதிகளின் எண்ணிக்கை ஆறாக உயர்த்தப்படுகிறது.
- சுதந்திரமான மற்றும் நவீனமான ஒன்டாரியோ சட்ட ஆணையத்தை (Law Commission of Ontario) மறுபடி நிறுவுதல்; நீதி வழங்கல் செயல்பாட்டையும் நீதியை அணுகும் வசதியையும் எவ்வாறு மேம்படுத்துவது என்பதற்கான பரிந்துரைகளை இந்த ஆணையம் உருவாக்கும்.
- சுயேச்சையான காவல்துறை மறுபரிசீலனைச் சட்டம் (Independent Police Review Act) 2006 என்ற சட்டத்திற்கான வரைவு 103ஐ அறிமுகம் செய்வது; இச்சட்டம் நிறைவேறினால், ஒன்டாரியோவின் காவல்துறையை பரிசீலனை செய்யும் சுயேச்சையான பொதுமக்கள் அமைப்பு உருவாகும்.
- ஒன்டாரியோ சட்ட உதவி அமைப்புக்கு (Legal Aid Ontario) 2006/07க்கான நிதியுதவியை $13 மில்லியனாக உயர்த்துவது. மெக்கின்ட்டி அரசு, 2003 அக்டோபர் முதலாக, அடிப்படை நிதியை 10 சதவிகிதம், அல்லது $25 மில்லியனாக உயர்த்தியுள்ளது.
- செய்தி ஊடகங்கள் மற்றும் பொதுமக்களுக்கு நீதி அமைப்பின் பகிரங்கத்தன்மையை மேம்படுத்தவும், ஊடகங்கள் மற்றும் நீதித்துறைக் கூட்டாளிகளுக்கு தகவல் அணுகும் வசதி மற்றும் கல்வி ஆதரவை மேம்படுத்தவும் கொள்கைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றுதல்.
- சமுதாயத்தினிடையே தன்னலம் கருதாப் பணியாற்ற அரசு வழக்குரைஞர்களுக்கான புதிய வழிகளைக் கண்டறிய தன்னலமற்ற செயல்பாட்டுக் குழுவை உருவாக்குதல். இதில், சட்டம் மற்றும் குடிமை விஷயங்களில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழக்குரைஞர்கள் உதவி செய்யும் வகையில் 'பள்ளியைத் தத்தெடுத்தல் திட்டமும்' (Adopt-a-School Project) அடங்கும்.

- குடும்பத் தகராறுகள் அனைத்தும் ஒன்டாரியோ மற்றும் கனடிய சட்டத்தின்படி நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்கிற குடும்பச் சட்டத் திருத்தச் சட்டத்திற்கான (Family Statute Law Amendment Act) வரைவு 27ஐ நிறைவேற்றுதல்.

- 30 -


தொடர்புகள்:
பிரெண்டன் கிராலி (Brendan Crawley)
அட்டர்னி ஜெனரல் அமைச்சகம்
தொடர்புப் பிரிவு (Communications Branch)
*(416) 326-2210*


www.attorneygeneral.jus.gov.on.ca
பொதுவான தொலைபேசி விசாரணைகள்: 416-326-2220 or 1-800-518-7901

பார்வைத்திறன் இழந்தவர்கள் மேற்குறிப்பிட்ட தொலைபேசி எண்களை அழைத்து, இந்த ஆவணத்தின் உரையைக் கேட்கலாம்.
TTY: 416-326-4012

இந்த ஆவணம் 14 மொழிகளில் மொழியாக்கம் செய்யப்படுகிறது
இதன் மொழியாக்கம் விரைவில் கிடைக்கும்: www.attorneygeneral.jus.gov.on.ca